மலர் 1 இதழ் 4 ஏப்ரல், 2017 ISSN : 2454-3993

# வைரமுத்துவின் "விவசாயிகள்"

**க.கனிமொழி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
கணேசர் கலை அறிவியல் கல்லூரி,
மேலைச்சிவபுரி

வைரமுத்துவின் பன்முக ஆளுமை கொண்ட ஒரு படைப்பாளி. அவரின் பாடுபொருள் எதுவாக இருப்பினும், அதனுள் மொழியப்படும் பண்பாட்டு மொழி விவசாயமாக இருக்கக் காணலாம். அவரின் "மூன்றாம் உலகப் போர்" உள்ளூர் விவசாயிகளின் குரல்வழியாக உலக விவசாயிகளின் வாழ்வியல் சிக்கல்களைப் பேசுகின்றது. வாசனின் வாசிப்பு-ரசிப்பு இவற்றைத் தாண்டி தீர்வுகள் வேண்டும் என்ற நோக்கத்தை முன்மொழிகிறது. இயற்கையாலும், செயற்கையாலும் கூடிவரும் புவிவெப்பம் உலக விவசாயத்தின் மீது நிகழ்த்திக் கொண்டிருக்கும் தாக்குரவுகளை இக்கட்டுரையின் வழி காணலாம்.

இரண்டு உலகப்போர்கள் முடிந்துவிட்டன என்று வரலாறு அறிவித்து விட்டது. மூன்றாம் உலகப் போர் எப்பொழுது தொடங்கியது அது எப்பொழுது முடிவுக்கு வரும் என்பது இன்னும் அறிவிக்கப்படவே இல்லை. புவி வெப்பமாதல், உலகமயமாதல் என்ற இரண்டு சக்திகளும் கண்ணுக்குத் தெரியாத ஆயுதம் ஏந்தாத விஞ்ஞானப் போர்தான் மூன்றாம் உலகப்போரென முன்னுரையில் ஆசிரியர் கூறுகின்றார். மூன்றாம் உலகப்போரில் பருவம் பொய்த்தல், வேளாண் பயிர்களை நோய் தாக்குதல்

இடுபொருள் செலவிற்காக விவசாயி வாங்கும் கடன், விலைபொருள் விலை ஏய்ப்பு, விவசாய தொழிலாளி பற்றாக்குறை, தலைமுறை இடைவெளி, முதலாளிகள் குறு விவசாயிகளின் நிலங்களை விற்பனைக்கு வாங்குதல் போன்ற சிக்கல்களை விவசாயி எதிர் கொள்வதாய்க் காட்டுகின்றார்.

**பருவம் பொய்த்தல்**

"ஏர் பின்னது உலகம்" என்பார் வள்ளுவர். இது வேளாண் தொழில் உயர்வானது என்பதைக் காட்டுவது. உலக வாழ்க்கை உயிர்களைச் சார்ந்தது உயிர்கள் உணவைச் சார்ந்துள்ளன. உணவு விவசாயத்தைச் சார்ந்துள்ளது.

விவசாயம்தான் நாடோடிப் பண்பாட்டிலிருந்து மனிதனை இருத்தல் பண்பாட்டிற்கு வளர்த்தது. உண்ணல், உடுத்தல், இருத்தல் என்ற அடிப்படை உயிர்த்தேவைகளை ஒழுங்குபடுத்தியது. ஆனால் இன்று, "பூமி வானம் என்ற இருவழிகளிலும் தான் தாக்கப்படுவது அறியாத விவசாயி விளையும் என்ற நம் நம்பிக்கைக்கும் விளையாது என்ற எதார்த்தத்திற்கும் மத்தியில் கலப்பை கட்டி உழுகிறான் அல்லது அழுகிறான்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க மழை, விவசாயி வாழ்வை ஒன்று பெய்து கெடுக்கிறது அல்லது பெய்யாமல் கெடுக்கிறது.

ஆடி மாதம் மழை பெய்தது. ஆடிப்பட்டம் தேடி விதை என்று "சீனிச்சாமி" கடலை விதைத்தார் புரட்டாசியில் ஒரு மழைபெய்தால் பூவெடுத்து விளைந்துவிடும். தமிழ் நாட்டுற்குக் கார்காலமாகிய காலத்திலேயே மழை ஏய்த்து விட்டது. கடலை காஞ்சிபோச்சு.

ஐப்பசியில் நச்சு மழையாப் பெய்தது. உள் தண்ணி ஊறிப்போச்சு சீனிச்சாமி நெல் நட்டார். குளிர் அடிக்க வேண்டிய மார்கழியிலும் மழை கொட்டியதால் கண்டழகன் நோய் வந்து நட்டதெல்லாம் செத்துப் போச்சு.

சீனிச்சாமி எதையாவது விவசாயம் பண்ணனுமே என்று வெள்ளச்சோளம் வெதைச்சாரு நாலு வருசம் மழையே இல்லை. வறச்சி கடுமையான வறட்சி.

"வடக்கே கோதுமை. தெற்கே நெல் இதுதான் இந்தியாவின் தானியக் கலாச்சாரம். நூறு நாட்களில் நான்கு பருவங்கள் வேண்டும் தமிழ் நாட்டு நெல்லுக்கு ஒரு மழை, ஒரு குளிர், ஒரு பனி, ஒரு வெப்பம் என்ற நான்கு பருவங்கள் நிலை கொண்டுள்ளன ஒரு நெல் மணியில் ஆனால் புவிச்சூட்டில் பருவங்கள் மாறிப் போனதில் தலை சுற்றிப் போனான் தமிழ் நாட்டு விவசாயி. கடைசியில் மனிதனுக்கு நட்ட நெல் மாட்டுக்கும் தேறவில்லை" (மூ.உ.போ.ப.191)

மண்ணை ரசாயணம் தின்று விட்டது
நீர்நிலைகளைச் சாயக்கழிவுகள் குடித்துவிட்டன
மழையைத் தரும் மரங்கள் பெருமளவில்
வெட்டப்பட்டு விட்டன. விளைவு

பருவம் பொய்த்து விட்டது. அல்லது மாறிவிட்டது.

அதனால் புவி வெப்பமாதல், உலகமயமாதல் என்ற இரண்டு பூதங்களால் ஒரு விவசாயி ஒரே நேரத்தில் விழுங்கப்படுகிறான்.

மண்ணைத் துளைத்தலும் விண்ணைத் துளைத்தலுமான ஆராய்ச்சி, புவிப்பரப்பை முன்னெப்போதும் இல்லாத அளவிற்குச் சூடாக்கிப் பருவமாற்றம் மழைபொய்த்து வேளாண் உற்பத்தியைக் குறைத்து விட்டன என்பது ஆசிரியர் கருத்தாய் உள்ளது.

**நோய்த் தாக்குதல்**

விவசாயிகளின் அடுத்த சிக்கல் விளைபயிர் நோய்களால் தாக்கப்படுதல். "வாழை போட்டா கு(ை)ழ நோயி தாக்குது. கரும்பு போட்டா செந்தா(ை)ழ அடிக்குது. தென்னை நட்டா மண்டைப் புழுவு விழுந்து குருத்தழிஞ்சு போகுது. தக்காளி, கத்தரி, வெண்டை நட்டா கத்தாழைச் சீக்கு. சக்கரவள்ளிக் கிழங்கு நட்டா அரக்கு அடிக்குது. காம்பழுகல் நோய் வந்து மொண்ணையாப் போயிருது மொளகாச் செடி. கணக்குப் போட்டுப் பார்த்தா வெதைச் செலவுக்கு வந்து சேரல" (மூ.உ.போ.ப.61)

பழங்காலத்தில் விவசாயம் செய்தபோது இவ்வளவு நோய்கள் வந்து தாவரங்களைத் தாக்கியதில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் பூச்சிக் கொல்லி மருந்தும், உரமும்தான் என்பதை விவசாயிகள் உணர்ந்தே இருக்கின்றனர். ஆயினும் இந்திய விவசாய அரசியல் அவர்களை அதில் மூழ்கடிக்கவே செய்கின்றது.

முதல் உலகப் போரில் கைதிகளைக் கொல்லப் பயன்படுத்திய அம்மோனிய நச்சுப்புகை பூச்சிக்கொல்லி மருந்தாகவும், இரண்டாம் உலகப்போரில் வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படுத்திய அம்மோனியா சூப்பர்பாஸ்பேட் உரமாகவும் ரசவாதம் பெற்றன. மூலத்தை இழந்து விட்டான் இந்திய விவசாயி. மூளைச் சலவை செய்யப்பட்டான் உலக விவசாயி. சாணமும், எருவும், சாம்பலும், தழையும் குழைத்துக்குழைத்துக் கொட்டிப் செய்யப்பட்ட விவசாயம், சோதனைக் குழாய்களின் கைகளுக்குப் போய்விட்டது. மலடாகிப் போனது மண், விஷமாகிப் போனது உணவு. இதுவே தாவரங்களை நோய்த் தாக்குவதற்கான காரணமாகச் சொல்லப்படுகிறது.

**இடுபொருள் செலவுக் கடன்**

இன்று உலகம் முழுவதும் விவசாயிகள் தற்கொலை அதிகரித்துக்கொண்டே உள்ளது. அதற்கான ஒரு காரணம் கடன். விவசாயத்தையே பெரிதும் நம்பி வாழும் மூன்றாம் உலக நாடுகள், தங்கள் நிலங்களில் விவசாயிகள் தான் வாங்கிய கடனுக்காக அவமானப்பட்டு தற்கொலை செய்து கொள்வதைத் தடுக்க முடிவதில்லை.

ஒரு விவசாயிக்கு நிலம் என்பது நிலம் மட்டுமல்ல. அடையாளம். பிடிமானம். ஒரு மனிதனை ஓர் ஊரில் இருத்திவைக்கும் வேர். இன்று விளையும், நாளை விளையும். மண் ஏமாத்தது என நினைப்பவன் விவசாயி. ஆகவே தோல்விகளுக்குப் பிறகும் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கிறான். மண்மீது கொண்ட நம்பிக்கையால் இடுபொருள் செலவுக்காகக் கடன் வாங்கும் சூழல் ஏற்படுகிறது.

சீனிச்சாமி மனைவியின் தண்டட்டியை அடகு வைத்துக் கடலை போட்டார். காய்ந்து போனது. மகளின் கால்கொலுசை அடகு வைத்து நெல் நட்டார் தண்டழுகல் நோய் வந்து செத்துப் போச்சு. கவட்டைக் காலணிடம் கடன் வாங்கிச் சோளம் விதைத்தார். நான்கு வருடம் மழை இல்லை. ஒரு நாள் கவட்டைக்காலன் அவமானப்படுத்த மனைவி மகளோடு கூட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

பொன்னுசாமிய மூணு வெள்ளாமை ஏய்த்து விட்டது. கடைசியா மகள் வீட்டு நகையை வாங்கி அடகு வைத்து ஆறு ஏக்கர் "ஐ.ஆர்.அம்பது" நெல் நட்டார். என் பொழப்பும் தழப்பும் இந்த ஒரே வெள்ளாமைல இருக்குன்னு எல்லா சாமியவும் கும்பிட்டார். ஆனால் குழை நோயி வந்து நாறிப் போச்சு. "நகையத் திருப்பிக் கேட்ட மருமகன் கெட்ட வார்த்தை கேட்டுப்புட்டான். அவமானம் தாங்காம பொன்னுச்சாமி பூச்சி மருந்தைக் குடிச்சு இறந்து போனார். (மூ.உ.போ.ப.100)

அரசு ஊழியர்களுக்கான பெரும் வாய்ப்பை அரசு ஏற்படுத்தினால் விவசாயத் தற்கொலைகள் தடுக்கப்படும் என்பது ஆசிரியர் தரும் தீர்வாக உள்ளது. (முன்னுரை.ப.10)

### விளைபொருள் விலை ஏய்ப்பு

விவசாயிகள் எதிர்கொள்ளும் இன்னொரு சிக்கல் விளைபொருள் விலை ஏய்ப்பு. ஒரு விவசாயி தான் விளைவித்த பொருளுக்கான விலையைத் தான் வைக்க முடிவதில்லை. யாரோ நிர்ணயிக்கும் நிலை உள்ளது. இடுபொருள் செலவைவிடப் பல நேரங்களில் விற்பனை விலை குறைந்தே உள்ளது. பல போராட்டங்களுக்கிடையே கிடைக்கும் விவசாயிகளின் விளைபொருள் மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும் என்று கட்டுப்படுத்தும் அரசாங்கம், இடுபொருள்கள் மிகக்குறைந்த விலையில் விவசாயிக்குக் கிடைக்க வேண்டும் என்று எண்ணுவதில்லை. விலைபொருள் விலைப் பாதுகாப்பு இன்மையால் விவசாயி தடுமாறுகிறான் அல்லது தடம் மாறுகிறான்.

"400 மூட்டை நெல் விற்றால் ஒரு டிராக்டர் வாங்கலாம் நாற்பதாண்டுகளுக்கு முன்பு. இன்று டிராக்டர் வாங்க 1200 மூட்டை நெல் விற்க வேண்டும் விலை வாசிக்கேற்ப விவசாயி வளர்ந்துள்ளானா?" (மூ.உ.போ.ப.166) என்கிறார் வைரமுத்து.

"ஏழு ஏக்கர் வாழை போட்ட பரமனாண்டி அதன் ஒரு தார் வாழைக்கான இடுபொருள் செலவு ரூபாய் பதினாறு, விற்பனை விலை பதினைந்து. ஏற்கெனவே வாழ வைக்கும் வாழைன்னு கடன்வாங்கி போட்டேன். இதில் நட்டம் என்றால் என்னாவது அருவா இருக்கிறவன் வெட்டிட்டு போ" (மூ.உ.போ.ப.170) என்று சொல்லியதாகக் கூறுகிறார். வெளைச்சல் குறைந்து விட்டது. செலவு கூடிப் போச்சு, கடன் ஏறிப்போச்சு, விலை இறங்கிப் போச்சு என்னய்யா ஆகும் விவசாயத்தைத்தவிர வேற ஒன்னும் தெரியாதவன் பொழப்பு என்ற கேள்வி தவறாகத் தெரியவில்லை.

### விளைநில விற்பனை

கடந்த இருபதாண்டுகளில் விளைநிலம் மிகவும் சுருங்கி விட்டது. விவசாயம் சுருங்கி வருகிறது. தேவைக்கேற்ற உற்பத்தியும் குறைந்து விட்டது. இதற்கான

காரணங்களுள் ஒன்று விலை நிலங்கள் விற்கப்படுதல். வீட்டுமனை விற்பனைக் காரர்கள், ஆலை முதலாளிகள் ஏழைச் சிறு விவசாயிகளின் நிலங்களை வாங்கிக் குவிக்கிறார்கள். புஞ்சை நிலத்திற்கு நஞ்சை விலை தருவதாயும்,

"நெலத்த வித்து பேங்குல போடு, வட்டிக் காசுல வாழ்க்கை நடத்து, ஓடி ஓடிச் சாகாத, ஒக்காந்து தின்னு" (மூ.உ.போ.ப.182) என்று ஆசை வார்த்தை கூறியும் அப்பன ஆத்தாள விற்க முடியுமா? நெலமும் அப்படித்தான். மண்ணை வித்துட்டுப் போறது கண்ணை வித்துட்டுப் போற மாதிரி. நிலம்தான் வாழ்வின் ஆதாரம், நிலம்தான் உயிர் என்று நினைக்கும் விவசாயிகளையும் விற்க வைக்கின்றனர். அரசாங்கப் பணத்தைக் கடன் என்ற பெயரில் அபகரிக்க ஏழை விவசாயிகளின் நிலத்தைச் சில நேரம் மிரட்டியும், சில நேரம் முன்பணம் வாங்குன இரசீதுல இருந்த கையெழுத்த எடுத்துப் போலிப் பத்திரம் பண்ணி" (மூ.உ.போ.ப.375) ஏமாற்றியும் வாங்குகின்றனர்.

"விற்கப்படக் கூடாது விளை நிலங்கள், விற்கப்பட்டால் அரசாங்கம் அவற்றை வாங்கி வேளாண்மையைத் தொடர வேண்டும்" (மூ.உ.போ.ப.11) என்பது வைரமுத்து முன்வைக்கும் தீர்வாய் உள்ளது.

**விவசாயத் தொழிலாளி**

விவசாயத்தில் இருவரின் உழைப்பு மிகவும் முக்கியமானது. ஒன்று நிலமுள்ளவனின் உழைப்பு, மற்றொன்று நிலமில்லாத விவசாயக் கூலிகளின் உழைப்பு, ஆனால் இன்றைய நிலை உழைத்த தலைமுறை உளுத்த தலைமுறையாக ஆக்கப்பட்டு விட்டது. துய்ப்புக் கலாச்சாரம் உழைக்கும் நேரத்தை உறிஞ்சி விட்டது.

அரசாங்கத்தின் இலவசத் திட்டங்களில் வாழப் பழகியவர்கள், மதுரசத்தில் மூழ்கிப் போனார்கள். மதுக்கடை வாசல்களில் தவணை முறையில் செத்துக் கொண்டிருக்கிறார்கள் பல விவசாயத் தொழிலாளிகள்.

"மந்திரி வாராராம். கூட்டம் கொறையுதாம் ஆளுக்கொரு பிரியாணிப் பொட்டலமாம். கையில வேற எறநூறாம். எவன் வருவான் வேலைக்கு"

ஏர் ஓட்ட, விதை விதைக்க நீர்ப்பாய்ச்ச, "களை பறிக்க, அறுவடை செய்ய, தென்னை ஏறி தேங்காய் புடுங்க, வண்டி ஓட்ட என்ற எந்த விவசாயத்தொழிலும் செய்ய மனிதன் சத்திழந்தும் போனான்.

மண்ணில் உழைப்பதற்குச் சற்றும் சளைக்காத விவசாயி "நம்ம ஊர்ல விவசாயம் மாதிரி ஒரு தொழிலும் இல்ல. அது மாதிரி ஒரு துன்பமும் இல்ல. என்னோட ஒழியட்டும்டா மகனே் இந்த மண்ணோட மாரடிக்குற பொழப்பு. நீயாச்சும் நகத்துல அழுக்கு ஒட்டாம நல்ல பொழப்பு பொழச்சுக்க கண்ணு" (மூ.உ.போ.ப.68) அதன் அடுத்த தலைமுறையின் தொழிலையே மாற்றுகிறான்.

கடன் வாங்கிக் கூட விவசாயம் செய்யும் விவசாயி அதற்கான வேலைக்கு ஆட்கள் கிடைக்காமல் தடுமாறுகிறான். "இன்று களையெடுக்கும் மூதாட்டிதான் கடைசித் தலைமுறை. இன்று கலப்பை பிடிப்பவன்தான் கடைசி மனிதன். விவசாயத்தை விட்டு

வெளியேறுகிறான் படித்தவன். அவனுக்கு விவசாயம் என்பது அழுக்கு அல்லது இழுக்கு”

ஊர் கூடிப் பாடுகிற கூட்டுப் பாட்டல்லவோ விவசாயம் ஊருக்குத்தான் ஜாதி பேதம் நிலத்துக்கில்லை. விழி பிதுங்கிப் போனான் விவசாயி. தான் வேறு எந்த வேலைக்கும் லாயக்கில்லை என்று நினைப்பவன் மட்டுமே விவசாயத்தைத் தொடருகிறான்.

இந்தியாவிற்கு இரண்டு பணிகள் உள்ளன. ஒன்று விவசாயத்தை மீட்டெடுத்தல் அல்லது விவசாயத்திலிருந்து விவசாயியை மீட்டெடுத்தல். இதற்கு வைரமுத்து முன்மொழியும் தீர்வுகள் “நவீன தொழில் நுட்பத்திற்கு விவசாயம் தாவ வேண்டும். விவசாயி கற்றவனாக வேண்டும் அல்லது கற்றவன் விவசாயியாக வேண்டும்” (மூ.உ.போ.ப.11) என்பன. உலகிற்கு உணவளிக்கும் விவசாயியை மேற்கண்ட சிக்கல்களிலிருந்து காப்பாற்றாதவரை கொலைகளும், அவர்களின் தற்கொலைகளும் தவிர்க்க இயலாதவைகளாகும் என்பதே இந்நாவல் வழி வைரமுத்து உணர்த்தும் கருத்தெனில் மிகையன்று.